## அறிமுகம்

# உண்மையான இயேசு யார்?

*"உண்மையை சொல்வது" என்பது அமெரிக்காவில் 1960 மற்றும் 70 களில் பிரபலமான ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியாயிருந்தது. மூன்று போட்டியாளர்கள் ஒரு பிரபலமான வல்லுனர் குழுவுக்கு முன் தோன்றி தாங்கள் மூவரும் ஒரே நபர்தான் என உரிமைகோரினார்கள். அந்த நபர் பொதுவாக சில அசாதாரணமான காரியங்களை செய்தவராக இருந்தார். பல நிமிடங்கள் கேள்வி கேட்டபின்னர், வல்லுனர் குழுவினர் உண்மையை சொன்னதாக தாங்கள் நம்பினவருக்கு ஓட்டளிப்பார்கள். கேரி மூர் என்ற நிகழ்ச்சி தொகுப்பாளர், "உண்மையான ________ ________ தயவுசெய்து எழுந்து நிற்பீர்களா?" என கூறியபோது உச்சகட்ட நேரம் வந்தது. பின்னர், உண்மையை சொன்னவர் யார் என வெளிப்படுத்தப்படுவார், மற்றும் போலியாக நடித்தவர்கள் யார் என வெளிப்படுத்தப்பட்டார்கள்.*

இயேசுவானவர் யார் என்பது தொடர்பாக பல்வேறு விளக்கங்களை மற்றும் வியாக்கியானங்களை நீங்கள் கேள்விப்படும் போது, நீங்களும் "உண்மையான இயேசுவானவர் *தயவு செய்து* எழுந்து நிற்பீர்களா?" என கேட்க விரும்பும் நிலையில் உங்களை காண்பீர்கள். இயேசுவானவர் மனித வரலாற்றின் மிக முக்கியமான ஒரு நபராக இருந்து கொண்டு, கல்வியாளர்கள், சமய நம்பிக்கையாளர்கள் மற்றும் பொழுதுபோக்கு உலகத்தார் ஆகியோருடைய கவனத்தை ஈர்த்துள்ளார்; ஆனால் இவை எல்லாமே உண்மையிலேயே அவர் யார் என்பதை புரிந்து கொள்வதற்கு உதவி செய்வதில்லை.

ஒரு குழுவினர் ("இயேசுவின் கருத்தரங்கம்") இவரை ஒரு நடமாடும் யூத கதை சொல்லுபவராக, எவரும் இடறலை அடையும்படி அல்லது பெயரையும் புண்படுத்தும்படி ஒருபோதும் எதையும் சொல்லாதவராக விளக்குகிறார்கள்.[1] மற்றவர்கள் இவரை மக்களை கவரும் ஒரு பிணிதீர்ப்பவராக, ஒரு மந்திரவாதியாக, ஒரு சமூக சீர்திருத்தவாதியாக அல்லது ஒரு அரசியல் புரட்சியாளராக வர்ணிக்கிறார்கள். மெல் கிப்சென் என்பவரின் 2004ம் ஆண்டின் *The Passion of the Christ* என்ற படம், அவரை ஒரு பாடுபடும் தியாகியாக வர்ணித்தது. ஆனால் அவருடைய தெய்வீக தன்மை குறித்து தெளிவான உணர்வை ஏற்படுத்தவில்லை. சமீபத்தில், Dan Brown னின் *The Da Vinci Code* மற்றும் Michael Baigentன் *The Jesus Papers* ஆகியவை புதிய ஏற்பாடு மற்றும் கிறிஸ்தவர்களால் இயேசு யார் என்று அறியப்பட்டிருந்தாரோ/பிரதிநிதித்துவப்பட்டிருந்தாரோ அவர் அல்ல என்ற கருத்தை பிரபலப்படுத்தினார். இந்த புத்தகங்கள் அவரை ஒரு தெய்வீகதன்மை இல்லாத மனிதராக, அவருடைய உண்மையான அடையாளத்தை மறைப்பதற்கு பெரிய அளவிலான மூடிமறைக்கும் திட்டத்திற்கு அவர் உட்படுத்தப்பட்டிருந்ததாக வர்ணிக்கின்றன.

இயேசுவானவருக்கு மறுவிளக்கத்தை கொடுக்க விரும்பாதவர்களும் கூட அவருடைய அடையாளம் தொடர்பான குழப்பத்திற்கு துணைபோயிருக்கிறார்கள் ... பல பக்தியுள்ள மக்களும் இயேசுவானவரை

குறித்து இடைவிடாமல் பேசுகிறார்கள். ஆனால் அவர்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் அவரை விவரிக்க விரும்புகிறார்கள்: "இயேசு என் இதயத்தை இனிதாக்குகிறவர்"; "இயேசு என் சமாதானத்தின் ஊற்றாக இருக்கிறார்." இவர் மனித வரலாற்றின் காட்சியில் ஒரு நிஜமான நபராக இருந்தார் என்பதையும் மற்றும் ஒரு உணர்வுக்குரிய பெயராக அவர் இருக்கவில்லை என்பதையும் அவர்கள் நின்று, உணராமல் இருக்கிறார்கள். இயேசுவானவரை குறித்து அநேக சத்தியங்களை அறிந்து கொள்ள முடியும் என்பதை அவர்கள் கற்றுக்கொள்ளும்போது அவர்கள் ஆச்சரியப்படுகிறவர்களாக - பாதிக்கப்படுகிறவர்களாகவும்கூட - இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட குழப்பம் ஒன்றும் புதிதானது அல்ல. கெல்முட் தைலிக் என்பவர், "மேலும் மேலும் இயேசுவின் தோற்றம் ஒவ்வொரு காலத்தின் சுவைக்குத் தக்கதாக கொடூரமான முறையில் சிதைக்கப்பட்டுள்ளது"[2] என்றார். யேல் வரலாற்று ஆசிரியர் ஜரோஸ்லாவ் பெலிகன் "ஒரு குறிப்பிட்ட காலம் இயேசுவை எந்த வழியில் வரைந்து விளக்கியுள்ளதோ, அதுவே அந்த காலத்தின் அறிவு வளர்ச்சியின் திறவு கோலாக உள்ளது" என்பதை கவனித்துள்ளார்.[3] வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இயேசுவானவர் யார் என்பது குறித்த பல் வேறு கருத்துக்கள், அவர் யார் என்று கூறுவதை விட, நம்மை பற்றியே அதிகம் கூறுவதாக உள்ளது. அவரைப்பற்றிய உண்மைகள் இருந்தும்கூட, அவர் எப்படி இருக்கவேண்டுமென நாம் விரும்புகிறோமோ, அவ்வாறே அவரைக் கண்ணோக்க சாய்கிறோம். அதின் விளைவாக இன்று "இயேசுவானவரை"ப் பற்றி பேசுகிறவர்கள், அவருடைய பெயரைப் பயன்படுத்தும்போது அடிப்படையில் ஒருவரிலிருந்து ஒருவர் வித்தியாசமானவைகளை அர்த்தப்படுத்துகிறார்கள்.

நம்முடைய வேலை, இயேசுவானவரை குறித்து நாம் உண்மையில் என்ன அறிந்து கொள்ள முடியும் என்பதை கண்டுபிடிப்பதில் தான் உள்ளது. நாம் நவீன காலத்தில் இயேசுவானவர் எவ்விதம் காண்பிக்கப்படுகிறார் என்பதைக் குறித்தோ அல்லது நமது உணர்வுகளின் வழியாக இயேசுவை நாம் எவ்விதம் பார்க்கிறோம் என்பதைக் குறித்தோ கரிசனைப்படுவதில்லை. ஆனால் முதல் நூற்றாண்டில் ரோம பேரரசின் காலத்தில் உண்மையிலேயே வாழ்ந்து மற்றும் மரித்த இயேசுவானவரைப் பற்றியே அக்கறை செலுத்துகிறோம்.

---

குறிப்புகள்

[1]சுவிசேஷ பதிவுகளில் சொல்லப்பட்டுள்ளவைகளில் 18 விளுக்காடு மட்டும் இயேசுவானவர் உண்மையிலேயே சொன்னார் என்ற முடிவுக்கு அவர்கள் வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு கூற்றின் மீதும் ஓட்டுபோட்டு இந்த முடிவுக்கு வந்தார்கள். அவர்களுடைய முடிவுகள் எந்த விதத்திலும் ஒருமனதானவைகள் அல்ல. [2]Helmut Thielicke, *How Modern Should Theology Be?* trans. H. George Anderson (Philadelphia: Fortress Press, 1969), 18. [3]Jaroslav Pelikan, *Jesus Through the Centuries: His Place in the History of Culture* (New Haven, Conn.: Yale University Press, 1985), 3.